**லாஹுகல பிரதேச சபை**
**அம்பாறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 05 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 16 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து லாஹுகல பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கை

நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் சபையின் 1,537 நூலகப் புத்தகங்கள் காணாமல் போனமை வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்தப் புத்தகங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்குகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் மாதத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் அழிவடைந்த பானம பொது நூலகத்தில் காணப்பட்ட புத்தகங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்குகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வருமானப் பரிசோதகரினால் வங்கிக்கு நேரடியாக வைப்புச் செய்யப்பட்ட ரூபா 18,435 தொகையான வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பொதுப் பேரேட்டின் பிரகாரம் திரண்ட நிதியக் கணக்கின் மீதி ரூபா 142,379,662 ஆக இருந்த போதிலும், ஐந்தொகையில் பெறுமதி ரூபா 144,866,662 ஆக ரூபா 2,487,000 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதியொன்று பொதுப் பேரேட்டின் பிரகாரம் இல்லாதிருந்த போதிலும், ஐந்தொகையில் ரூபா 23,565,941 ஆக காண்பிக்கப்பட்டமையால் ஐந்தொகையில் உரிமை அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிறுத்தி வைத்தல் கணக்கின் மீதி பொதுப் பேரேட்டின் பிரகாரம் ரூபா 1,528,086 ஆக இருந்த போதிலும் ஐந்தொகையில் நிறுத்தி வைத்தலாக ரூபா 1,938,960 ஆகக் காண்பிக்கப்பட்டதன் மூலம் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 410,874 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) சபைக்குச் சொந்தமான ரூபா 17,141,884 பெறுமதியான கெப் வண்டி, சிறியரக கெப் வண்டி, மற்றும் டிபர் வாகனத்தின் பெறுமதி என்ன காண்பிக்கப்படாமையினால் நிலையான சொத்துக்கள் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) சபைக்குச் சொந்தமான பெறுமதி கண்டறியப்படாத உழவு இயந்திரத்தினதும் இழுவைப் பெட்டியினதும் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) இலங்கை வங்கியின் நடைமுறைக் கணக்கின் ஆரம்ப மீதி காசேட்டின் பிரகாரம் ரூபா 294,368 ஆக காணப்பட்ட போதிலும், கணக்கில் ரூபா 2,794,368 ஆக ரூபா 2,500,000 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) சபை அதிகாரப்பிரதேசத்தில் காணப்படுகின்ற தொலைபேசிக் கோபுரங்களிலிருந்து 2016 ஆம் ஆண்டிற்காகக் கிடைக்க வேண்டிய ரூபா 27,000 வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்வின் போது பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் சபைக்குச் சொந்தமாக முதலீடுகள் எதுவும் காணப்படாதிருந்த போதிலும், ஐந்தொகையில் முதலீடாக ரூபா 1,174,478 காண்பிக்கப்பட்டதனால் நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) பிரதேச சபை விதி 180 | பிரதேச சபையின் வருமானங்களைச் சேகரித்தல், களஞ்சியக் கட்டுப்பாடு மற்றும் காசோலை விநியோகித்தல் என்பவற்றுக்குரிய உத்தியோகத்தர்களினால் பிணைப்பணம் வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| | நிதிப்பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்ட ரூபா 18,254 பெறுமதியான 06 மாதங்களை விஞ்சிய 09 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | நிதிப்பிரமாணம் 371 | 1988 முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலத்தில் விநியோகிக்கப்பட்ட ரூபா 86,066 பெறுமதியான 10 முற்பணங்கள் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | நிதிப்பிரமாணம் 389(ஆ) | பெறுனரின் அடையாளத்தை உறுதிப்படுத்தாமல் காசோலை கையளிக்கப்பட்டிருந்தது. |
| | நிதிப்பிரமாணம் 571 | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 637,363 பெறுமதியான 02 வருடங்களை விஞ்சிய 07 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | நிதிப்பிரமாணம் 1647(உ) | சபையின் 21 வாகனங்கள் தொடர்பாக வாகனப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| | நிதிப்பிரமாணம் 1646 | 12 வாகனங்கள் தொடர்பாக மாதாந்தம் பிரயாணம் தொடர்பான பொழிப்பும் அட்டவணையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (இ) | திறைசேரிச் சுற்றறிக்கை | |
| | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமாக ரூபா 162,535,506 பெறுமதியான நிலையான சொத்துக்கள் காணப்பட்ட போதிலும் அதனை உள்ளடக்கியதாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/2 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 09 கணனிகள் காணப்பட்ட போதிலும் சபையினால் கணனி மற்றும் கணனி உபபாகங்கள் தொடர்பாக தனிப்பட்ட பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கை 30/2016 | சபைக்குச் சொந்தமான எந்தவொரு வாகனத்திற்கும் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச சபையின் வேலை நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 647,966 ஆன வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினமாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் நிதி விளைவுகள் ரூபா 3,490,626 மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானமாக இருந்ததுடன் நிதி விளைவில் ரூபா 4,138,592 வீழ்ச்சியொன்றாக காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீண்டெழும் வருமானத்தை பகுப்பாய்வு செய்த போது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் வாடகை வருமானம், அனுமதிப்பத்திரக் கட்டணம், சேவைகளுக்கான கட்டணம் மற்றும் ஏனைய உதவிகள் என்ற மூலங்களில் 26 சதவீதம் முதல் 1,593 சதவீதம் வரையிலான வீச்சில் அதிகரிப்பும், தண்டப்பணமும் பிடியாணைக் கட்டணமும் மற்றும் ஏனைய வருமானம் என்ற மூலங்களில் 33 சதவீதம் முதல் 77 சதவீதம் வரையிலான வீச்சில் குறையும் காண்பித்தது.

மீண்டெழும் செலவினத்தை பகுப்பாய்வு செய்த போது முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது சம்பளமும் படிகளும், வழங்கலும் உபகரணங்களும், மூலதனச் சொத்துக்களை பழுதுபார்த்தல் மற்றும் உதவிப் பணம் போன்ற மூலங்களில் 13 சதவீதம் முதல் 311 சதவீதம் வரையிலான வீச்சில் அதிகரிப்பும், பிரயாணச் செலவினம், போக்குவரத்து தொடர்பாடல் மற்றும் ஓய்வூதியம் என்ற செலவின விடயங்களில் 07 சதவீதம் முதல் 54 சதவீதம் வரையிலான வீச்சில் குறைவையும் காண்பித்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் போன்றவை தொடர்பான விபரங்கள் பின்வருமாறு இருந்தன.

| வருமான விடயம் | 2016 ஆம் ஆண்டிற்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2016 ஆம் ஆண்டிற்குரிய உள்ளபடியான வருமானம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வாடகை வருமானம் | 750,000 | 912,292 | 200 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 205,000 | 138,500 | 26,783 |
| சேவைகளுக்கான கட்டணம் | 295,000 | 40,906 | - |
| தண்டப்பணமும் | 2,505,000 | 897,577 | - |

| | | | |
|---|---|---|---|
| பிடியாணைக்<br>கட்டணமும்<br>ஏனைய வருமானம் | 625,000 | 226,155 | - |

### 2.3.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்பட்ட 09 தொலைபேசிக் கோபுரங்களில் 08 இற்காக 2009 ஏப்ரல் 19 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க வர்த்தமானியின் பிரகாரம் ஆகக் குறைந்தது ஒரு கோபுரத்திற்கு ரூபா 20,000 வீதம் ரூபா 160,000 தொகையான ஆரம்ப கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அந்த 09 தொலைபேசிக் கோபுரங்களுக்காக 2016 ஆம் ஆண்டிற்கு அறவிட வேண்டிய ரூபா 27,000 தொகையான வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிலுவை வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணமாக கிடைக்க வேண்டிய ரூபா 26,563 தொகையை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான நூலகத்தில் 2014 திசெம்பர் மாத இறுதிவரையில் 1,537 புத்தகங்கள் தொலைந்து போயிருந்ததுடன், இந்த புத்தகங்களில் பெறுமதி இனங்காணக்கூடிய 1,040 புத்தகங்களின் பெறுமதி ரூபா 947,645 ஆக இருந்தது. எனினும், அதற்குரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 11 வருடங்களுக்கு முற்பட்ட காலம் முதல் விற்றுத் தீர்க்குமாறு பொருள் மெய்மையாய்வுச் சபையினால் சிபாரிசு செய்யப்பட்ட 933 புத்தகங்களை விற்றுத் தீர்ப்பதற்கு இதுவரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பழுதுபார்த்தல் செயற்பாடுகளுக்காக 2010 ஆம் ஆண்டில் கராஜ் ஒன்றிற்கு அனுப்பப்பட்ட தண்ணீர் பவுசர் மீண்டும் சபைக்கு கிடைக்கப்பெற முடியாதிருந்த போதிலும் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் ஆரம்பம் முதல் 04 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 14,200 தொகையான ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2010 ஆம் ஆண்டு முதல் முத்திரைக் கட்டணமாக அறவிடப்பட்ட உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 85,103 செலுத்தப்படாமல் இதுவரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 16 வாகனங்களின் உரித்தை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. வாகன உரித்தை மாற்றுவதற்காக 2016 ஆம் ஆண்டில் விடுதலைக் காலமொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், இந்தக் காலத்தில் உரித்தைக் கையேற்றல் இடம்பெறாமையினால் ஒரு வாகனத்திற்கு தாமதக் கட்டணமாக ஒரு நாளைக்கு ரூபா 100 வீதம் தண்டப்பணம் அறவிடப்பட்டமையால் வருடத்திற்கு ரூபா 584,000 தொகைக்கு அண்ணளவான தண்டப்பணமொன்று இந்த வாகனங்களின் உரித்தைக் கையேற்கும் போது செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தது.

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான ஓடக்கூடிய நிலையில் காணப்படுகின்ற 14 வாகனங்களில் 05 வாகனங்களுக்காக மாத்திரம் வருமான அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதி பூட்கை என்பன பெறப்பட்டிருந்ததுடன் மிகுதி வாகனங்களுக்காக வருமான அனுமதிப்பத்திரமும் காப்புறுதி பூட்கையும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013, 2014 மற்றும் 2015 என்ற ஆண்டுகளுக்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் பொது 49 படிவத்தின் கீழ் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத பொருட்கள் தொடர்பாக இதுவரையிலும் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான 07 வாகனங்கள் பழுதுபார்க்க வேண்டிய நிலையில் காணப்பட்ட போதிலும் இதுவரை பழுதுபார்க்காமல் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) புறநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 4.2 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட லாஹுகல சந்தைத் தொகுதியின் வேலைகள் 2016 திசெம்பர் 22 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், இதுவரையிலும் திறந்து வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இக்கட்டிடம் அமைந்துள்ள காணியின் உரித்தை கையேற்பதற்கு முறையான பிரகாரம் கையேற்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்காக ஒப்பந்தங்களைக் கையளிக்கும் போது குறித்த காலப்பகுதியில் சங்கத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய மொத்த ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 03 இனை விஞ்ச முடியாதிருந்ததுடன், ஒப்பந்தங்களின் மொத்த பெறுமதிகளின் கூட்டுத்தொகை ரூபா 02 மில்லியனை விஞ்ச முடியாதிருந்த போதிலும் சபையினால் மீளாய்வாண்டின் போது ரூபா 13,962,593 தொகையான 08 செயற்திட்டங்களினதும் ஒப்பந்தம் ஒரு சங்கத்திற்கே வழங்கப்பட்டிருந்தது.

# 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதிடப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 07 சதவீதம் முதல் 172 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் ஏற்பட்டமையினால் பாதீடு சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 128 இன் பிரகாரம் சபையினால் 2016 ஆம் ஆண்டிற்காக வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமையும் கட்டுப்பாடும்

கீழே காண்பிக்கப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபை விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் | கவனம் செலுத்தப்பட வேண்டிய துறைகள் |
|---|---|
| (அ) வருமான நிர்வாகம் | i. நிலுவை வருமானத்தை அறவிடல் |
| | ii. உப விதிகளை விதித்தல் |
| | iii. வருமான மூலங்களை இனங்காணல் |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீட்டை சரியானதாகத் தயாரித்தல் |
| (இ) களஞ்சிய நிர்வாகம் | உடனடியாக சரி பிழைகளை பார்க்கக்கூடிய வகையில் பொருட்களைக் களஞ்சியப்படுத்தல் |
| (ஈ) சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்களின் உரித்தை கையேற்றல் |
| (உ) கணக்கீடு | சொத்துக்களை கணக்குகளுக்கு கொண்டு வருதல் |